உ

கணபதிதுணை.

திருப்பணிப்பேட்டைச்சுந்தரேசர்

# திருத்தொண்டர்மாலை.

---

இஃது

ஷெயூர் கா. தொ. சுப்பாமுதலியாரவர்கள்

இயற்றியது.

திருப்பூந்துருத்தி

துரைசாமி முதலியாரவர்கள் குமாரர்:—

டி. டி. சண்முகவேலாயுதமுதலியாரவர்கள்

வேண்டுகோளால்,

திருப்பரங்குன்றம்

அ. நாராயணசரணரால்

---

தஞ்சை

கல்யாணசுந்தரம் முத்திராசாலையில்

அச்சிடப்பட்டது.

1912.

உ

கணபதி துணை.

# திருப்பணிப்பேட்டைச் சுந்தரேசர்.

## திருத்தொண்டர் மாலை.

### காப்பு:

திருத்திகழ்செல்வமல்குந்
திருப்பணிப்பேட்டையெம்மான்
றிருத்தொண்டர்நாமம்போற்றச்
செய்கயமுகத்தெங்கோவே. (௧)

இந்தமாலையினின்னுமை
மிலங்கறுபத்துமூவர்
தந்திருநாமம்போற்றத்
தயவுசெய்சுந்தரேசா. (௨)

ஏற்றிலங்கிறைவனுமை
மேத்துமெய்த்தொண்டர்நாமம்
போற்றிடப்புரிவாயன்ன
பூரணியென்னுமன்னே. (௩)

உந்தையாமெந்தைநாம
முயர்திருத்தொண்டர்நாமஞ்
சிந்தைசெய்தன்பிற்போற்றுஞ்
செயலருள்குமரவேளே. (௪)

திருமுனைப்பாடிநாடர்
திருத்தொண்டத்தொகையிலோதும்
பெருமைசேரன்பர்நாமம்
பேசுவேன்சுந்தரேசா. (௫)

திகழறுபத்துமூவர்
திருநாமமதையிந்நூலிற்
புகலுவேனம்பியாண்டார்ப்
போற்றியேசுந்தரேசா. (௬)

இலகுசீர்த்தொண்டர்காதை
யிசைத்திடச்சேக்கிழாருக்
குலகெலாமெனவெடுத்தன்
றுரைத்தவாசுந்தரேசா. (௭)

தாவில்சீர்ச்சேக்கிழார்தந்
தாணிணைந்தறுபதின்மேன்
மூவர்நன்னாமமிந்நூன்
மொழிகுவேன்சுந்தரேசா (௮)

எந்தையாஞ்சேக்கிழார்சீ
ரியம்புமாபதியார்பொற்றாள்
சிந்தைசெய்தன்பர்நாமஞ்
செப்புவேன்சுந்தரேசா. (௯)

இலங்கருபத்துழுவ
ரிணையடிவணங்கியன்னோர்
நலங்கிளர்நாமமிந்நூ
னவிலுவேன்சுந்தரேசா. (ய)

திருத்தொண்டத்தொகைமெய்யன்பர்
திருநாமமிந்தநூலி
விருத்தலாற்கற்றோர்குற்ற
மெடுப்பரோசுந்தரேசா. (கக)

தூயநின்னுமைந்தொண்டத்
தொகையடியார்களும
மேயவிந்நூலையாவர்
வெறுப்பவர் சுந்தரேசா. (கஉ)

நூல்:— கடிமணப்பந்தரெய்துங்
காலையாரூரர் தம்மை
யடிமையென்றோலைகாட்டி
யாண்டவாசுந்தரேசா. (க)

அண்டர்கள்புகழுந்தில்லை
யந்தணராறைஞ்ஞூறெண்
கொண்டவர்பரவுமன்றிற்
கூத்தனேசுந்தரேசா. (உ)

திருக்குளத்தினிதுமுழ்கித்
திருநீலகண்டரில்லோ
டுருக்கிளர்ந்தெழப்புரிந்த
வொருவனேசுந்தரேசா (ங

தருகெனமனைவிதன்னைத்
தருமியற்பகையையொக்க
வருகெனவரச்சேவேறி
வந்தவாசுந்தரேசா. (௪)

வயலிடும்வித்துவாரி
வந்தமுதாக்குமாற
ருயவொளிபாகிபாண்ட
வுத்தமாசுந்தரேசா. (௫)

வெந்தொழில்புரிந்தோன்செல்ல
விடுத்துமெய்ப்பொருளார்நின்றாள்
சிந்தைசெய்திடப்புரந்த
செல்வனேசுந்தரேசா. (௬)

இவ்வியனடியார்ப்போற்று
தேகுவோன்புறகென்றேது
மவ்விறன்மிண்டார்க்கென்று
மணியனேசுந்தரேசா. (௭)

வந்தமர்நீதியார்பால்
வைத்தொருகோவணம்பின்
றந்திடென்றருளித்தாட்கொள்ளுந்
தலைவனேசுந்தரேசா (௮)

வண்டறுமலரைச்சிந்தும்
வயக்கரிகரந்துணித்த
தொண்டராமெறிபத்தர்க்கோர்
துணைவனேசுந்தரேசா. (௯)

நின்றமர்புரிவோனெற்றி
நீற்றறையேனாதிநாத
ரன்றுகண்டினிதுபோற்ற
வளித்தவாசுந்தரேசா (௧0)

கண்ணிடந்தப்பிமற்றோர்
கண்டொடுமுன்கண்ணப்ப
நண்ணுநம்வலத்திலென்ற
நாதனேசுந்தரேசா. (௧௧)

நங்கைபொற்றாலிமாறி
நாறுகுங்கிலியங்கொண்டே
யெங்கணற்கலயர்போற்று
மிறைவனேசுந்தரேசா. (௧௨)

வதுவைநாளொருபெண்கூந்தல்
வாளினாலரிந்துநீட்டு
மெதிரின்மானக்கஞ்சாறர்க்
கினியனேசுந்தரேசா. (௧௩)

ஊட்டியையரியும்வைவா
ளூறுந்தாயர்கையைச்செங்கை
நீட்டிமுன்பிடித்தாட்கொண்ட
நிமலனேசுந்தரேசா (௧௪)

கொன்றையின்மருங்கானாயர்
குழலிதழ்வைத்துநின்சீர்
நன்றுபோற்றிடக்கொண்டேகு
நண்பனேசுந்தரேசா (௧௫)

முழங்கைவன்கல்விற்றேய்த்த
மூர்த்திமும்மையிற்பாராண்டு
வழங்குநற்கதிபெற்றுய்ய
வைத்தவாசுந்தரேசா- (கசு)

பனிமலர்மாலைசாத்திப்
பாவுமெம்முருகர்காழிப்
புனிதரோடொளிபுக்குய்யப்
புரிந்தவாசுந்தரேசா. (கஎ)

புதியசெங்கமலப்பொய்கை
புக்குநின்றுருத்திரத்தைத்
துதிசெயும்பசுபதிக்கோர்
துணைவனேசுந்தரேசா (கஅ)

ஓங்குசெந்தழலின்மூழ்கி
யொருமுனிவடிவாய்த்தோன்றி
யாங்குறுநாளைப்போவார்க்
களித்தவாசுந்தரேசா. (ககூ)

தொலைவில்சீர்த்திருக்குறிப்புத்
தொண்டர்கற்பாறை யிற்றந்
தலைபுடைத்திடப்பிடித்தாள்
தலைவனேசுந்தரேசா. (உ0)

தந்தைதாளறவெறிந்த
தண்டிமுன்விடைமேலேறி
வந்தருள்புரிந்தவந்தி
வண்ணனேசுந்தரேசா. (உக)

புண்ணியாவுன்னடிக்கே
போதுகின்றேனென்றேத்தி
யெண்ணுமப்பரைத்தாட்கொண்ட
விறைவனேசுந்தரேசா (உஉ)

தகவுடைநாவலூரர்
தாம்பெருநம்பியென்று
புகழ்குலச்சிறையார்க்கின்பம்
புரிந்தவா சுந்தரேசா. (உ௩)

எனதுயிர்த்துணைவரேக
விரேன்முனங்கயிலைசேர்வே
னெனுமிழலைக்குறும்பர்க்
கினியனேசுந்தரேசா. (உ௪)

பேய்வடிவன்றுவேண்டிப்
பெற்றகாரைக்காலம்மை
சேவடிநிழலில்வாழச்
செய்தவாசுந்தரேசா. (உ௫)

தெளிபுனற்பந்தர்மற்றுந்
திருநாவுக்கரசெனும்பே
ரொளிபெறவெழுதப்பூதிக்
குரியவாசுந்தரேசா (உ௬)

களங்கமினீலநக்கர்
காழிமன்மணங்கண்டேத்தி
விளங்கொளியடையச்செய்த
வித்தகாசுந்தரேசா (உ௭)

வெஞ்சமணடுங்கநீரால்
விளக்கிடுநமிநந்திக்குத்
துஞ்சலில்பதமளித்த
தோன்றலேசுந்தரேசா. (௨௮)

திருமணம்புரியுநாப்பண்
டெரிவையோடெஞ்சம்பந்தர்
பெருமணம்புகவங்காண்ட
பிஞ்ஞகாசுந்தரேசா (௨௯)

வன்றொண்டர்வரல்கேட்டாவி
டாய்த்திடுமேயர்கோனு
ரன்றெழுந்தளாவச்செய்வித்
தாண்டவாசுந்தரேசா. (௩௦)

அன்றொருசித்தர்மூல
ராகிமந்திரத்தையோதிச்
சென்றுவெண்கிரியிற்றுழுஞ்
செல்வனே சுந்தரோசா (௩௧)

அருகர்கண்கெடத்தங்கண்பெற்
றத்தண்டியடிகள்வாழத்
திருவருள்புரியுந்தேவ
தேவனேசுந்தரேசா. (௩௨)

சூதில்வெல்செல்வமெல்லாந்
தொண்டர்களமுதுக்காக்குங்
கோதிலாமூர்க்கர்க்கின்பங்
கொடுத்தவாசுந்தரேசா. (௩௩)

ஏழுலகுவப்பவேள்வி
யியற்றுசோமாசிமாறர்
வாழுநற்சிவபுரத்தில்
வைத்தவாசுந்தரேசா. (௩௪)

எழின்மலராகக்கல்லை
யெறிந்தசாக்கியருக்கென்று
மழிவில்பேரின்பநல்கு
மத்தனேசுந்தரேசா. (௩௫)

தொழும்பருக்கமுதளித்துத்
தூயவேள்விகளியற்றித்
தொழுஞ்சிறப்புலியையாண்ட
துணைவனேசுந்தரேசா (௩௬)

செல்வனையமுதமாக்குஞ்
சிறுத்தொண்டர்சிறுவன்றாதி
யில்வரவுடன்கொண்டேகு
மிறைவனேசுந்தரேசா (௩௭)

சென்றுவன்றொண்டரோடுஞ்
சேரமான்றிருவுலாவை
நன்றுகேட்பிக்கக்கொண்ட
நாதனேசுந்தரேசா (௩௮)

சண்பையர்கோன்றனுக்கர்ச்
சனைபுரிகணநாதர்க்குன்
றண்பதநிழலளித்த
தாணுவேசுந்தரேசா (௩௯)

மாற்றலர்மண் கவர்ந்தூன்
மலாடிமுடியாக்கொண்ட
கூற்றுவனருக்கின்பங்
கொடுத்தவா சுந்தரேசா (௬௰)

புனிதர் பொய்யடிமையில்லாப்
புலவர்நின்புகழைப்பாடி
யினியவீடடையச்செய்த
வெந்தையேசுந்தரேசா (௬௧)

சடைத்தலைவணங்கிவாங்கித்
தலைமிசையேந்திச்செந்தீ
யிடைப்புகும்புகழ்ச்சோழர்க்கின்
பீந்தவா சுந்தரேசா (௬௨)

வரவங்கோர் தூர்த்தரம்பொன்
மகிழ்ந்திருநூறளிக்கு
நரசிங்கமுனையரன்பை
நயந்தவா சுந்தரேசா (௬௩)

இலங்கொளிமீனென்றெய்த
விதுசிவற்கெனவிடுக்கு
நலங்கொளவ்வதிபத்தர்க்கோர்
நண்பனே சுந்தரேசா (௬௪)

புக்கவரடிமையென்றப்
புனல்விடாதவள்கைவாங்கு
மக்கலிக்கம்பர்க்கின்ப
மளித்தவா சுந்தரேசா (௬௫)

விளக்கிடும்பணிமுட்டாமன்
மிடறரிந்திடப்பிடித்துக்
களக்கமில்கலியனாரைக்
காத்தவாசுந்தரேசா (சசு)

பரிவுறுமடியார்தம்மைப்
பழிப்பவர்கொடியநாவை
யரியுநற்சத்தியாருக்
கணியனேசுந்தரேசா (சஎ)

பாடுறுந்தில்லையாதி
பதிகளுக்கொவ்வோர்வெண்பா
பாடுமையடிகள்சேரும்
பதத்தனேசுந்தரேசா (சஅ)

புக்கிடும்புற்போதாமற்
பொங்கெரிமுடியைநீட்டு
மக்கணம்புல்லர்க்கின்ப
மளித்தவாசுந்தரேசா (சகூ)

சீரியார்பெறுஞ்செல்வத்தாற்
சிவாலயம்பலசெய்விக்குங்
காரியார்கயிலையிற்றுஞ்
கருத்தனேசுந்தரேசா (ருய)

பொன்னெடுமாடக்காழிப்
புனிதர்நீறணியப்பெற்ற
வந்நெடுமாறர்க்கின்ப
மளித்தவாசுந்தரேசா (ருக)

மனந்தளியறிவுதீப
மன்னுமன்பமுதாப்பூசை
தினம்புரிவாயிலார்நற்
செல்வமேசுந்தரேசா (ருஉ)

இகலெறிந்துற்றபொன்னை
வினியவர்க்கமுதளிக்கும்
புகழ்முனையடுவார்க்கின்பம்
புரிந்தவாசுந்தரேசா (ருங)

மணக்குமம்மலரைமோந்த
மனைவிமூக்கரிபட்டுங்கை
துணிக்குமக்கழற்சிங்கர்க்கோர்
துணைவனேசுந்தரேசா (ருச)

என்னிருநியமன்பர்க்
கென்பறைசாற்றுவிக்கு
மன்னிடங்கழியார்தூய
மனத்தனேசுந்தரேசா (ருரு)

முருகலரொன்றெடுத்து
மோந்தமன்றுணைவிமூக்கை
யரிசெருத்துணையார்க்கின்ப
மளித்தவாசுந்தரேசா (ருசா)

எய்ப்பினுற்புனற்குடத்தை
யெழின்முடிவீழ்த்திரங்கு
மப்புகழ்த்துணைக்கோர்காசீந்
தாண்டவாசுந்தரேசா (ருஎ)

எறிந்துசெய்மடியவாளா
லேற்றகோட்புலியையாட்கொண்
டிறந்துபோங்கிளைக்குநல்கு
மிறைவனேசுந்தரேசா (௫௮)

பத்தராய்ப்பணிவார்வந்துன்
பதாம்புயநிழலிலென்று
நித்தராய்விளங்கச்செய்பு
நின்மலாசுந்தரேசா (௫௯)

பரமனுமுன்னையன்பிற்
பாடுவார்தம்மைமாலும்
பிரமனும்புகழவைக்கும்
பிரபுவேசுந்தரேசா (௬௰)

செய்யநின்பதாம்புயத்திற்
சித்தத்தைவைத்தமேலோ
ருய்யநற்பதவிநல்கு
முத்தமாசுந்தரேசா (௬௧)

திருமகடவமியற்றுந்
திருவாரூர்ப்பிறந்தார்தம்மைப்
பொருவினற்கணங்களாக்கும்
புண்ணியாசுந்தரேசா (௬௨)

திருவருளான்முப்போதுந்
திருமேனிதீண்டுவார்நின்
றிருநகரமரச்செய்யுந்
தேவனேசுந்தரேசா (௬௩)

அணிமுழுநீறுபூசு
மத்தவமுனிவர்போற்றிப்
பணியுமம்போருகச்செம்
பதத்தனேசுந்தரேசா (௬௪)

அக்கணத்தோரப்பாலு
மடிச்சார்ந்தாரெனப்பெற்றோர்வந்
திக்கநற்கயிலைமேவுந்
தேவனேசுந்தரேச (௬௫)

புந்தியாற்சமைத்தோர்கோயிற்
புரிந்துனையிருத்திப்பூசல்
வந்தனைபுரியவாண்ட
வள்ளலேசுந்தரேசா (௬௬)

ஞானபோனகாற்பாண்டி
நாட்டமணழியச்செய்யு
மானியார்க்கருள்புரிந்த
மறைபவாசுந்தரேசா (௬௭)

நெய்துடைகோவணங்கீ
ணின்னடியவர்க்களிக்கும்
பொய்தவிர்நேசர்க்கின்பம்
புரிந்தவாசுந்தரேசா (௬௮)

சிறப்புடன்சிவாலயங்கள்
செய்வித்தசெங்கட்சோழர்க்
கிறப்புடன்பிறப்பொழித்த
வேகனேசுந்தரேசா (௬௯)

யாழினற்பதிகம்பாடு
மெழினீலகண்டப்பாணர்
சூழொளிபுகப்புரிந்த
சுயம்புவே சுந்தரேசா (எ

தூதனைப்போகவேண்டித்
தொழுதெழுவன்றொண்டர்க்குத்
தாதையாஞ்சடையருள்ளத்
தளியனே சுந்தரேசா (எ

வருமொருவெண் களிற்றில்
வடகிரியடைந்தார் தம்மைத்
தருமிசைஞானிக்கின்பந்
தந்தவா சுந்தரேசா (எ

தூல் முற்றிற்று.

தொழுதெழுபத்திரண்டு
தொண்டரைத்துதிசெய்துன்பூங்
கழனிழலடியேன்சேரக்
கிருபைசெய்சுந்தரேசா.

...த்து,

இத்திருத்தொண்டர்மாலை
யியம்புவோரினிதுகேட்போர்
சித்திபெற்றின்பமெய்துஞ்
சிறப்பருள் சுந்தரேசா.